கத்திடத்திலே சொல்ல வேண்டும் என்று வசனம் எழுதியிருக்கிறார். இன்று அந்தக் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், மக்கள் அரசாங்கத்திடம் சொல்கிறார்கள். கலைஞர் அவர்கள் அவர்களின் குறை கேட்டு பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே. பொன்னுவேலு அவர்கள் பேசும் போது, மின்சார ஊழியர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றார்கள். மின்சாரக் கம்பங்களில் ஏறி வேலை செய்யும் அலுவலர்களுக்கு நிச்சயமாக நஷ்டஈடு தரப்பட வேண்டும். அதற்கான வகை செய்யப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இதை நான் மனதார வரவேற்கிறேன். ஆபத்துச் சூழ்நிலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு நிச்சயமாக மின்சார வாரியம் பாதுகாப்புக் கொடுக்கும் முறையிலே நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களின் குடும்பம் நிர்க்கதியாக நிற்கும்படியான சூழ்நிலை இருக்கக்கூடாது. அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளுக்கு அளிக்கக்கூடிய சலுகைகள் விவசாயத்திற்கும் அளிக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு 9 பைசாவிற்குக் கொடுக்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கு லட்சக் கணக்கான ரூபாய்கள் சலுகையாக அளிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் சொன்னபோது, ½ பைசா உயர்த்தினாலும் தொழிற்சாலைகளுக்கு பல லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொன்னார்கள். விவசாயத்தையும் இதே கணக்கில் கொள்ளவேண்டும். தொழிற்சாலைகளுக்கு ஒரு கோடி, 50 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு அரசாங்கம் சலுகை அளிக்கிறது. விவசாயமும் தொழில்தான். அதுவும் உற்பத்தி செய்கிற ஒரு தொழில்தான். எனவே தொழிற்சாலைகளுக்கு அளிப்பதுபோல, விவசாயத்திற்கும் மின்சாரக் கட்டணத்தில் சலுகை அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாய உற்பத்தியை அதிகம் செய்யக்கூடிய வகையில் விவசாயிகளுக்கு மின் விசை ஏற்றத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஊக்கம் ஏற்படுத்துகின்ற வகையில் மின்சார வாரியம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அறிக்கையை வரவேற்று, இந்த வாய்ப்பை அளித்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

IV—ANNOUNCEMENT *RE* DATE FOR "HALF-HOUR DEBATE" ON NATIONALISED TEXT-BOOKS.

DEPUTY CHAIRMAN : I have to announce to the House that at the request made by the hon. Member Thiru M. Rajah Iyer, M.L.C. with reference to Starred Question No. 11, regarding the nationalised text-books, I fix Tuesday, the 1st September 1970 for a "half-hour debate" under rule 41 of the Tamil Nadu Legislative Council Rules.

The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow. 6-57 p.m.

The House then adjourned.